தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௪	மலர்
௪௬	பரிதாபி, பங்குனி (1973 — மார்ச்சு — ஏப்ரல்)	௰உ

மணி விழா

நமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றி அறுபதாண்டுகள் நிறைவுற்றது தமிழன்பர்கட்கெல்லாம் மகிழ்ச்சி தருவதாகும். செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் சங்கம் தோன்றியது முதல் முப்பது ஆண்டுகள் அதன் தலைவராக ஆற்றிய தன்னலமற்ற தொண்டின் பயனகப் பெரிதும் புறக்கணிக்கப் பெற்றிருந்த நந்தமிழ் மொழி புத்துயிர் பெறலாயிற்று. இன்று மொழியின் செம்மையையும் சிறப்பினையும் பல நாடுகளிலுமுள்ள அறிஞர்கள் போற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளதெனின் அதற்கு நந்தமிழவேள் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் சிலர் செய்த தொண்டுகளும் தமிழின் தனி நிலையைப் பாதுகாக்க நமது சங்கம் செய்துவரும் ஆக்கப் பணிகளும், இப்பால் தமிழக அரசு செய்துவரும் சீரிய முயற்சிகளுமே காரணமாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, குழந்தைகள் இல்லம், புலவர் கல்லூரி ஆகிய நான்கு கல்வி நிலையங்களையும், நூல் நிலைய மொன்றையும், திக்கற்ற மாணவரில்லமொன்றையும் நடத்தி வருவதுடன், தமிழ் மொழி நலங் கருதி வருவாய் நோக்கின்றி "தமிழ்ப் பொழில்" என்ற திங்களிதழை நாற்பத்தாறு ஆண்டுகளாக வெளியிட்டும் வருகிறது.

நமது சங்கத்தின் மணிவிழா 13—4—73 புத்தாண்டுப் பிறப்பன்று தொடங்கப் பெற்று கீழ்க்கண்டவாறு மூன்று நாட்கள் நடைபெறும்.

13—4—73 மாலை 6-00 மணி

தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் சிலை திறப்பு

தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர்

மன்னை ப. நாராயணசாமி அவர்கள்

திறப்பாளர் : மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர்

மு. கருணாநிதி அவர்கள்

14—4—73 காலை

கவியரங்கம். தலைவர் : கவிஞர் கண்ணதாசன் அவர்கள்

பட்டிமன்றம். நடுவர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மாலை 4—00

தலைவர் : முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்

கட்டடத் திறப்பு, சிறப்பு மலர்கள் வெளியிடல்

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள்

சொற்பொழிவுகள் : புலவர். க. வெள்ளைவாரணனர்

குடந்தை, பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசன்

கலை நிகழ்ச்சி — சங்கக் கல்வி நிலைய மாணவ மாணவியர்

15—4—73 காலை கருத்தரங்கம்,

தலைவர் : அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ., அவர்கள்

மாலை 4—00

தலைவர் : ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

விபுலாநந்த அடிகளாரின் படத் திறப்பு

க. வெள்ளைவாரணனர் அவர்கள்

சொற்பொழிவுகள் : டாக்டர், சொ. சிங்காரவேலன்

முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்

அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ.,

கலை நிகழ்ச்சி — இன்னிசை

மணி விழாவைச் சிறப்புற நடத்த, தமிழன்பர்கள் தங்களாலான உதவியைச் செய்ய வேண்டுகிறோம்.

விழாவிற்குத் தமிழன்பர்கள் அனைவரும் வந்து சிறப்பித்தருள்வார்களாக

கருந்திட்டைக்குடி,
29—3—73. } கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

அஞ்சல் வழி நிதி அனுப்புவோர் - பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை-2. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்டப் பிரிவு 15-B யின்படி வருமான வரி விதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரி ஆணையர் அவர்கள் தமது 13-1-60 ஆம் நாளைய சி. நெ. 212 (27) 58 உத்தரவில் அறிவித்திருக்கிறார்கள்.

நரபலிச் சிற்பங்கள்

திரு. அ. இராசேந்திரன்,
தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

தமிழகத்தில் தொன்று தொட்டு கிராம தேவதைகளுக்கு விழாக்கள் நடைபெற்று வந்தன. அவ்விழாக்களில் ஆடு, கோழி, பன்றி ஆகிய முப்பலி இடப்பட்டது. 'சிலம்பும் கழலும் புலம்புஞ்சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்ற வைக்கும்' 'கொடிய பிணிக்கு மருந்தாகும் முருகனுக்கும், உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் வழிவழியிருந்து வந்திருக்கிறது. கொற்றவைக்கு உயிர்ப்பலி கொடுக்கும் முறை ஆகமக் கொள்கைகள் பரவிய காலத்திலிருந்து இருந்து வருகின்றன என்று ந. சி. கந்தையா பிள்ளை கருதுவார்[1] கொற்றவைக்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் தமிழர்களுடையதன்று என்றும் வேதகால ஆரியர்களின் வருகைக்குப் பின் ஏற்பட்ட சடங்கென்றும் நிறுவப்படுகின்றது[2]

மாந்தனைப் பலியிடும் வழக்கம் தொன்று தொட்டு உலக நாடுகள் அனைத்திலும் இருந்து வந்த ஒன்று ஆப்பிரிக்காவில் பண்டை விழாக்களில் ஆண்டு தோறும் நூறு பேரைப் பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது கோண்டா, நெஸ்லாந்து போன்ற நாடுகளில் நரபலி தொன்று தொட்டு வழிபாட்டில் கொடுக்கப்பட்டன. மெக்சிகோவில் நாக வழிபாட்டில் தெய்வமேறி ஆடும் கூத்தில் நரபலி கொடுக்கப்பட்டன.[3] அமெரிக்காவில் டெனேச்சா (Tenochca) பகுதியில் ஒவ்வோராண்டும் 20,000 பேரை இறைவனுக்குப் படைத்தனராம்[4] வட அமெரிக்காவில் ஸ்கிடி, பவனி, நட்ஸிஸ் முதலிய இனத்தாரிடையே இப் பழக்கம் புகழ் பெற்று விளங்கியது பவனி இனத்தார் தங்கள் நிலங்களை உழும் முன்னர் தம்மினச் சிறுமிகளைப் பலியிட்டு செங்குருதியால் நானிலத்தை நனைத்த பின்னரே பயிர்த்தொழில் துவங்கினர்.

---

(1) ந சி கந்தையா பிள்ளை, 'வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்' பக். 122.,

(2) C சத்தியமூர்த்தி, M A., 'சிவலிங்க வழிபாடு' – பக் 5-30.,

(3) ந. சி. க, 'Pre – Historic Tamils, Page 90

(4) Encyclopedia P Vol II Page 937

எகிப்து, மெஸபடோமியா, பாலத்தீனம் போன்ற நாடுகளில் நரபலி கொடுத்தல் கி, மு. 3000 முன்பிருந்தே வழக்கத்திலிருந்தது. சுமேரிய மன்னர்களின் நினைவுச் சின்னக் கோபுரங்கள் நரபலியிட்டு எழுப்பப்பட்டவை. Gezer என்ற இடத்தில் நடந்த தொல்பொருள் ஆய்வு இதற்குச் சான்று பகர்கின்றன [5] சப்பானில் கிராம தேவதைகளுக்கு நரபலியிடப் பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர்.

தமிழ் இலக்கியச் சான்றுகள் :- தமிழ் இலக்கியங்கள் பல உயிர்ப் பலிச் செய்திகளைத் தெளிவாக்குகின்றன. ஓர் அன்னை தாம் வழிபடும் முருகனுக்கு ஆட்டுக்குட்டியை அறுத்துப் பலியூட்டிய செய்தியும் [6], கொற்றவைக்கு கொழுத்த ஒரு பசுவினைக் கொன்று பலியிட்டு அதன் குருதியைத் தூவி வழிபட்ட செய்தியும் [7] தாம் வழிபடும் கடவுளுக்குக் குருதியுடன் பிசைந்து உணவுப் படைத்த செய்தியும் [8] குறிக்கப்படுகின்றன.

சங்க காலத்தில் நரபலியைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை எனலாம் நரபலி கொடுக்கும் முறை சிலப்பதிகாரத்திற்குப் பிறகே காணப்படுகிறது. சிலம்பு, காளி தான் கொடுத்த வெற்றிக்கு விலையாக உயிர்ப்பலி கொள்பவள் எனக் கூறுகின்றது. [9] நரபலியைக் கீழ்கண்டவாறு வகைப் படுத்தலாம்,

நரபலி

- நவகண்டம் கொடுத்தல்
- உயிர்ப் பலி
  - களப்பலி
  - சாவரப் பலி

நவகண்டம் கொடுத்தல் :- இது கடமை யுணர்ச்சியின்பால் போர் வீரர் தம் விரதம் முடித்ததன் நினைவாகத் தம் தலையை அறுத்துப் பலியாகத் தருதல். இக் கொடையில் எயினர்களே சிறந்து விளங்கினர். [10] கலிங்கத்துப் பரணி, வீரர்கள் தங்கள் தலைகளை அரிந்து கொற்றவைக்குக் கொடுத்தபின் குறை உடல்

(5) .. ,, Page 830
(6) நற்றிணை 49 : 9 ;
(7) அகநானூறு 309 ; 4—6;
(8) நற் 345 : 3—5 பதி : 30 33 — 37 ; ஐங் : 259 : 3—4
(9) சிலப்பதிகாரம் (12) 16 : 17 & 43 : 4.,
(10) சிலப்பதிகாரம் வே. வரி, 19 · 21.,

கும்பிட்டு நிற்கும் நிலையைத் திறம்பட விளக்கும் [11] இவ்வாறு கொற்றவைக்குத் தலையை அறுத்துக் காணிக்கையாகத் தருதல் பக்தர் தம் மன உறுதியை நன்கு விளக்கும் என Dr. ஓகேல் விளக்குகிறார். [12] சமீபத்தில் கிடைத்துள்ள ஒரு நடுகல், வீரனொருவன் தன் கடமை முடிந்தபின், அதன் நினைவாகக் கொற்றவைக்குத் தன் தலையை அறுத்துப் பலியாகக் கொடுத்ததையும், ஊரார் அவன் உருவத்தைக் கல்லில் செதுக்கி, பீடும் பெயரும் பொறித்து. அவன் குடும்பத்தினர்க்கு நிலக் கொடை செய்ததையும் தெளிவிக்கின்றது [13]

சீசைலம் மண்டபக் கல்வெட்டு, பல வீரர்கள் தங்கள் தலைகளையும், நாக்குகளையும் இறைவிக்குக் காணிக்கையாகக் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது. [14]

உயிர்ப்பலி :— இம்முறை காவிய காலத்திற்குச் சற்றுப் பிந்தைய நிலை. மக்களிடையே வீரம் குறைந்து அச்சம் பிறக்கத் தலைப்பட்டது. தம் உயிரைப் பலியிட அஞ்சி பிறரைப் பலியிடத் தலைப்பட்டனர். இப்பலி, களப்பலி, சாவரப் பலி என இரு வகைப்படும்.

களப்பலி :— தெய்வத்திற்கு அரசனோ, ஊர் மக்களோ, வயது வந்த ஆடவரை வெட்டிப் பலிகொடுத்தல் கொங்கு நாட்டில் கண்ணகி தெய்வமாகப் பரவிய காலத்தில் கொங்கி நங்கோசர்கள் பல கொல்லரைப் பலியிட்டு வேள்வி செய்திருக்கின்றனர் [15] இவ் வகைப் பலி வடக்கிலும் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது சதபத பிராமணம் என்ற வடநூல் 185 ஆண் மக்களை வெட்டி வேள்வி வேட்ட செய்தியைக் கூறும் [16]

---

(11) கலிங்கத்துப் பரணி, கோயில் பாடியது. பாடல் : 14.,

(12) Prof. Nilakanta Sastri's translation of Dr. Oagale's 'Bulletin of School of oriental studies' in Kalai Mahal Ap. 32. No : 4.

(13) 'கல் வெட்டியல்'. நால்வர். பக். 155, த. தொ. ஆய்வுத் துறை வெளியீடு.

(14) I. M. P. Vol II Page 954.,

(15) உரை பெறு கட்டுரை — சிலம்பு. பக். 31.,

(16) Sathapathaprahmana. S B. E. Vol XLIV; Part V J. Eggling. P. 410.,

சாவரப் பலி :— கொற்றவைக்கு 12 வயதுப் பாலகனைப் பலியாகக் கொடுத்தல். இந்நிலை தமிழகத்தில் 5, 6, 7 ஆம் நூற்றுண்டில் அதிகம் பரவி இருந்தது. கொற்றவைக்குச் சிறுரைப் பலி கொடுத்த பின் அச் சிறுவர்களைப் போல் சிலை செய்து கோயிலின் முன் நிறுத்தி வழிபாடு செய்யப்படும். இதைப் பற்றிய செய்திகளை விரிவாகச் சோழர் பூர்வ பட்டயம் கூறும்[17]

"......பால குமாரரை அழைத்து வந்துத் திருமஞ்சன மாட்டித் திருநீற்றுக் காப்பிமிட்டு ...... நாலுவீதி பிரவணையும் வரவி அதிமுர்க காளிக்கு எதிர் நிறுத்தி வெட்டிப் பலியூட்டி ...... பால குமாரரையும் சாவரக் கோல முகித் தேதியாய் இரண்டு கற்சிலை விக்ரகமடித்து விக்ரகத்தை லிங்கர் கோயில் வாசலில் நிறுத்தி வைத்து உத்தம பண்டிதரைக் கொண்டு அந்தச் சிலைக்குப் புண்ணியாங்க அஸ்ட மந்திரப் பிரதிட்டை செய்தார்... .." எனக் குறிக்கிறது.

இப்பலி சென்னிமலை, பேரையூர், அவிஞசி, கண்ணனூர், அருணபுரி, மதுரை, மன்னியூர் போன்ற ஊர்களில் கொடுக்கப்பட்டு வந்ததும் சமயமுதலி (சுந்தரமூர்த்தி நாயனர்?) தம் இனத்தாரில் சில சிறுவர்களைப் பலியிட்டு மேற்கொண்டு இப் பலி நடவாமல் இருக்க ஒரே நாளில் பன்னிரு சிறுவர்களை வெட்டிப் பலி கொடுத்ததோடு நரபலி நின்றது என இப்பட்டயம் செப்புகிறது. தற் காலத்தில் கொற்றவைக் கோயில்களில் உள்ள 'முன் அடியான்' சாவரப் பலிச் சிற்பங்களாக இருக்கலாம். இவற்றிற்குப் பூசை செய்த பின்னே தேவிக்குப் பூசை நடைபெறும்.

தற்காலத்தில் கொற்றவைக்கு நரபலி இடும் பழக்கம் இல்லாவிடினும். மாற்றுகச் சில யுக்திகள் கையாளப்படுகின்றன. குழந்தைகளுக்காக வேண்டிக் கொண்ட பெற்றோர் குழந்தை உருவம், கால், கைகள், வடிவ மண் பொம்மைகளைச் செய்து கோயிலில் காணிக்கையாக்கப்படுகிறது மற்றும் பலர் மயிர், நகம் காணிக்கையாக்குவர். இவை பழைய நரபலியின் ஞாபகமே என ந. சி. கந்தையா பிள்ளை குறிப்பது[18] ஈண்டு அறியப்பாலது

---

(17) 'சோழன் பூர்வபட்டயம்'— C. M. Ramachandra Chettiar, G. M. Library Madras, Page : 122,

(18) வரலாற்றுக்கு முற்பட்ட பழந்தமிழர் — ந. சி. கந்தையா பிள்ளை. Page. 122.,

நோக்கும் நோக்கமும்

கிரேசு அலெக்சாந்தர்,
தமிழ் ஆராய்ச்சியாளர்,
பூ சா. கோ. கலைக்கல்லூரி, கோயமுத்தூர்

வாழ்க்கையில் நாம் பலரைக் காண்கிறோம் கண்ணில் படுபவரெல்லாம் நம் கருத்தைத் தொடுவதில்லை. கருத்தைத் தொடுபவர்கள் அனைவரும் நம்மைக் களிப்படையச் செய்வதில்லை. சிலரைக் கண்ட அளவில் தம் கண்ணும் கருத்தும் களிப்படைகின்றன. சிலரைக் கண்டதும் நம் கருத்தில் கலக்கம் தோன்றுகிறது. சிலரைக் கண்ட வழி ஒருக்கால் களிப்பும் பிறிதொருகால் கலக்கமும் கிளர்தலும் உண்டு. கண்ணும் கருத்தும் எஞ்ஞான்றும் களிப்படையுமாறு ஒருவரைக்காணல் சிறப்பு. காணல், பார்த்தல். நோக்கல் என்ற மூன்று சொற்களுமே, வெவ்வேறு பொருளாழம் படைத்தனவாக அமைந்திருப்பினும், கண்கொண்டு பார்க்கும் செயலைக் குறிக்கின்ற அளவில், ஒரே செயலைக் குறிக்கும் பல சொற்களாக அமைகின்றன. கம்பனது காவிய உலகில் நடமிடும் மாந்தர்கள் ஒருவரை ஒருவர், அன்றேல் ஒருவர் ஒரு பொருளைக் காணலைக் கம்பன். பல இடங்களில் குறித்துள்ளான் 'நோக்கினன்'. 'கண்ணுற்றான்' 'கண்டெனென்' பார்த்தான் என இன்னோரன்ன சொற்களைக் கம்பன் எடுத்தாள்கிறான்

இவற்றுள் நோக்கு என்ற சொல் பொருளாழம் கொண்ட புதை பொருட் சொல். மனமும் கண்ணும் இணைய நோக்குவது என்பது இதனடியாகக் கொள்ளக் கிடக்கும் எளிய கருத்து, கவிஞன் பலருடைய நோக்குப் பற்றிக் குறிப்பிடுகிறான் எனினும்; ஒருவழி களிப்புக் காதலும் கிளர நோக்கிய தலைவன் தலைவரிடையே நேர்ந்த பிறிதொரு நோக்கு, கலக்கத்திற்கு நிலைக்களனாக அமைதல் நோக்கி அவ்விருவர் தம் இரு நோக்கினையும் அவற்றினடியாகக் கிளர்ந்த மாறுபட்ட இரு வேறு நோக்கங்களையும் எடுத்து ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'குணங்களால் உயர்ந்த வள்ளலும்' 'எண்ணரும் நலத்தினாளும்', காலுறு கண்வழிப் புகுந்த காமநோய் இருவர் இதயத்தையும் நிரப்புமாறு நோக்கியக் காவிய நோக்கினைக் குறித்துக் கம்பன் ஒரு சொற்பொழிவே செய்து விடுகிறான்.

''கண்ணொடு கண்ணிணை கதுவி யொன்றை யொன்
றுண்ணவு நிலைபெரு துணர்வு மொன்றிட''

பாலகாண்டம் — மிதிலைக் காட்சிப் படலம் — 35

இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கினர்.

எதிர்முகமாக இருந்த இருவர் கண்ணிணைகளும் ஒன்றை ஒன்று கதுவி ஈர்த்து, ஒன்றினை ஒன்று உண்டு நின்ற நிலையைச் சுட்டும் கவிஞன் 'உண்டு' என்ற சொல்லால் கருத்தாழம் மிக்க உண்மையினைப் புலப்படுத்துகிறான். ஊண் உயிர் வாழ மிகவும் இன்றியமையாதது. உயிர்த்தலுக்கு அடுத்த நிலையில். ஊணும் நீரும் உண்ணல் மனித வாழ்வின் சிறப்புக் கடமைகளாக அமைந்துள்ளன ஊன்ற நோக்குவாருக்கு உயர்நிலை பெறுமாறு அமைந்த இவ்விரு செயல்களும் இன்றியமையாமை, எளிமை இவற்றுடன் இனிமையுங் கொண்டு. அமைந்திருத்தல் கண்கூடு. நாவால் உண்ணல் ஒருவகை, உயிரினங்களுக்குக் கைவந்த எளிய பொதுவான செயல். இங்கு கவிஞன் கண்களால் உண்ணலைக் குறிக்கிறான் கண்ணால், அல்ல கண்ணிணையால் இராமன் சீதையைக் கண்டான். வரப்பிற் பேரழகினுள் தன்னைச் சூழ நின்ற பெண்கள் தம் வெங்களி விழிக்கொரு விழவுமாய் அவர் தம் கண்களிற் காணுந்தொறும் — களிப்பு நல்கி மங்கையர்க்கனையதோர் மருந்துமாயவள் இராமனது நோக்கிற்கு இலக்காகிய சீதையின் கண்களைக் குறித்துக் கவிதைக் கம்பன் பெரும் ஈடுபாடும் இன்பமும் கிளரப் பேசுகிறான்.

காயயில் வேலும் கொலைவாளும்
பின்றம் மானப் பேர்கய லஞ்சப் பிறழ்கண்'

(மிதிலைக் காட்சி — 26)

கொல்லும் வேலுங் கூற்றமு மென்னு மிவையெல்லாம்
வெல்லும் வெல்லு மென்ன மதர்க்கும் விழி'

(மிதிலைக்காட்சி — 32)

தம் உருவத்தாலும் பார்வையின் கூர்மையாலும் சீதையின் விழிகள் வேலையும் வாளையும் ஒத்திருந்தன. சீதையைக் கண்டு காதல் கொண்டவன் ஒருவனே. இராவணன் சீதையைக் காணு முன்னரே காம வயப்பட்டான். மண நிகழ்ச்சிகளின் போது அவளைக் கணக்கற்றோர் கண்டதுண்டு; கண்டவர் யாரும் பிறிதியாதும் சிந்தை கொண்டிலர். அவர் தம் 'கைகள் தலை புக்கன' 'கருத்துளவை யாவும் தெய்வம் என உற்ற' என்பான் கம்பன். ஈண்டு காதலுக்கு நிலைக்களமாகச் சீதையின் கண்கள்

அமைகின்றன. தலைவனுக்குக் காதல் நோய் செய்த தகுதியாலும் அவை கொல்லும் படைகளோடும் கூற்றத்தோடும் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றன.

காதுவரை படர்ந்த நீண்ட கண்கள்

என்பான் கவிஞன் பின்னரும்

காதொடு குமிழ்பொரு வாள்நெடுங்கண்'
மிதிலைக்காட்சி — 46

கடைக் கண்
(மிதிலை 46)

நிழலிடு குண்டல நிரப்பு நீங்குற
அழலிட மிளிர்ந்திடு மயில் கொள் கண்'
(மிதிலை — 43)

விடம் போன்று நெடிது நிறைந்து பரவும் காதல் நோய் செய்த கண்கள் எனினும், இயல்பால் தண்ணியவை எனவே 'மழைக் கண்' 'நோய்விடக் கண்' எனக் குறிப்பிட்டான் கவிஞன். வள்ளுவரது

இருநோக்கு இவளுண்கண் உள்ளதொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து
குறள் — 1091

எனும் கவிதைச் சுவையைக் கம்பன் இவண் நினைவூட்டுகின்றான்.

இத்தகைய பேரெழில் நிரம்பிய கண்களை நுழை வாயிலாகக் கொண்டு தன்னுள் புகுந்த அக்கள்வன் நிகழ்த்திய மாயத்தைத் தொகுத்துக் கூறும் சீதை

'நெருக்கியுட் புகுந்துநன் னிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போயினன்'
— மிதிலைக் காட்சி — 54

என்பாள் இராமன் தானே வலிந்து தன் முயற்சியோடு சீதையினுட் புகுந்து அவருடைய நல் நிறை, பெண்மை நலம் இவற்றினை ஈர்த்து உருக்கித் தன் உயிரொடும் கூட அள்ளி உண்டு சென்றான் என்கிறாள். இங்ஙனம் தன்னை ஆட்கொள்ளுமாறு அவனிடம் அப்படி என்னதான் அமைந்திருந்தது என எண்ணிப் பார்க்கிறாள் சீதை 'இந்திர நீலம் போன்று இருண்டு கிளர்ச்சியூட்டிய குஞ்சியோ, சந்திரன் போன்ற முகமோ, தாழ்தடக்கைகளோ அழகுமிழும் மணிமலை போன்ற

நிமிர்ந்த தோட்களோ அல்ல அல்ல; 'முந்தி என் உயிரை அம் முறுவல் அன்றோ உண்டது' எனச் சீதை ஆய்வுரை பகருமிடத்துக் கண்களால் உண்டவனுக்கு மட்டுமன்று அங்ஙனம் தான் உண்ணப்பட்டதை எண்ணுங்கால் அப்பேற்றினைப் பெற்றவளுக்கும் அகத்தே அளப்பரிய இன்பம் கிளர்வதைக் காணலாம். உண்ணப்பட்டதை எண்ணுங்கால் இன்பம் அச்செயல் இடையீடுற்றமை பற்றி இடர்ப்பாடு எனச் சீதை இன்ப துன்ப எல்லை நிலைகளில் சிக்கி அலமறுகிருள். நேரில் நோக்கிய காலை தன்னையே உண்டு நின்றவன், பிரிந்து சென்றகாலை பிரிவால் எல்லையில்லா இடர் தன்னை எய்துமாறு விடுத்து, அதனாலும் தன் உயிர் உண்பானாய் அமைந்ததைச் சீதை எண்ணி ஏங்கினாள்.

நோக்கால் உணர்வுகள் ஒன்றினை ஒன்று உண்டு மகிழ்ந்த நிலையில், கிளர்ந்த இன்ப மோதலில், இருவருக்குமே நிலை தடுமாறியது. பார்வைகள் மோதிய காலை, மன உணர்வுகள் தமக்குள் ஒன்று கலந்து உறவு கொண்டாடின. இவ்வாருக வள்ளுவன் கூறிய கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களின் செம்பாதி இராமன் சீதையிடையே பகுதி பகுதியாக நிறைவேறியதைக் காணலாம்.

இருவர் நோக்கும் ஒருகணம் இலக்குமாறின. பெண்ணியல்பால் அவளது வேலிணைகள் மதுகையான் தோளில் ஆழ, வீரன் செங்கண்ணும் தாக்கணங்கனையவள் தனத்திற் தைத்தன. இத்துணை பகர்ந்த பின்பும் கம்பனுக்கு மனநிறைவு தோன்றவில்லை போலும் இன்னும் தொட்ட பொருளையே தொடர்ந்து தொடுகிருன். இக்காவிய நோக்கிற்குக் கவிதைக் கம்பன் 'பருகிய நோக்கு' என்றொரு பெயர் சூட்டி மகிழ்கிருன். இனி இருவரும் வேறு என்பதில்லை. ஒருவர் உணர்வை ஒருவர் நோக்காற் பருகிய நிலையில், இருவரும் ஒருவர் பால் ஒருவர் பாசத்தாற் பிணிப்புண்டனர். இதயங்கள் ஒன்றன்பால் ஒன்று ஈர்ப்புண்டன. இவ்வீர்ப்பின் ஆற்றலால் இருவரும் மாறிப் புக்கிதயம் எய்தினர் 'நங்கையும் ஐயனும் ஒன்றுபட்ட இரு உடம்பிற்கு உயிர் ஒன்று' என்ற ஒன்றிய சிறப்பான நிலையை அடைந்தனர். பேச்சியின்றி, பிரச்சாரமின்றி மனத்தளவில் ஒரு — திருமணம் — காதல் மணம் — இறை மணம் — இனிது நிறைவேறியது 'கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப் பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ? எனக் கம்பன் இந்த மொழி இடையீடற்ற, விழிவழி விளைந்த விழாவிற்கு அமைதி காண்கிருன்.

இதுகாறும் பேசப் பெற்றது கருத்தொருமித்த காதல் நோக்கு. இதன் நோக்கங்களாக மன உறவும் மண உறவும் அமைந்தன. பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், இத்தலைவன் தலைவியரிடையே நிகழ்ந்த பிறிதொரு நோக்குப் பற்றிக் கம்பன், மீட்சிப் படலத்தில் குறிப்பிடுகிறான்- பத்துத் திங்கள் தொடர்ந்து தன் தலைவனைப் பிரிந்திருந்ததால் விளைந்த துயரம், தவிப்பு எனுமிவை ஒருபுரம் மனதை வாட்ட, தன் கற்பினுக்கு ஊறு விளைவிக்கத் துடிக்கும் மாற்றான் இடையீட்டால் எழுந்த அவலம் மறுபுறம் அச்சுறுத்த, இராமனைக் காண வேண்டும் என்ற நோக்கமே சிறப்பாக அமைந்து உயிர்வாழுமாறு ஊக்குவித்த நிலையில்; அவனைக் காணலாம் என ஏங்கி நின்ற நிலைமாறிக் கட்புலன் நிறைய காணும் வேளை வந்ததினால் 'கருந்தடங் கண்ணும் நெஞ்சும் களித்திட்டாள் சீதை.

ஊன்ற நோக்குவாருக்கு, ஈண்டு பேசப்படுகின்ற நோக்கும் நோக்கமும் முன்னர் மிதிலைக் காட்சிப் படலத்தில் பேசப்பட்ட நோக்கிற்குப் பல்லாற்றானும் மாறுபட்டதாக அமைவது வெளிப்படை. அவண் இராமனைக் கண்ட காலை அவனைக் கூடி வாழ உடலும் உள்ளமும் விழைந்தன. இவண் மாற்றான் மனையில் சூழ்நிலைக் கோளாறால் வதிய நேர்ந்த நிலையில், இராவணன் கண்கள் தன் மேனியைக் கண்டதொன்றாலேயே, தான் எச்சிற்பட்டு விட்டதாய்ச் சீதை கருதினாள். இராமனே தனது உயிர்த் துடிப்பு; எனவே அவனைப் பிரித்ததினால் உயிர்த்துடிப்புள்ள உடலாக இல்லை அது உயிரற்ற உடல் வெறும் உடலம், பொய்யுடல் என்றே சீதை தன்னை நொந்து கொண்டாள். அது பற்றி இனி அவளுக்கு வேறு விருப்பமில்லை. எனினும் பள்ளத்தைப் பார்த்துப் பாயும் வெள்ளம் போன்று உடலம் வெளி நின்றிருந்த உயிராகிய

> 'பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்க்
> கைச்சிலை யேந்திநின் றதனைக் கண்ணுற்ற அளவில்
> அதனைத் தேடி ஓடிற்று
> போனபே ருயிரினைக் கண்ட பொய்யுடல்
> தானது கவர்வுறுந் தன்மைத் தாமென'
>
> அந்நிகழ்ச்சியினைக்
>
> மீட்சி — 58

கம்பன் கவினுறுகக் குறிப்பிடுகிறான்.

ஆசை அகன்ற நிலையில் சீதை தன் கணவனைக் கண்டு தொழுதல் ஒன்றே நோக்கமாகக் கொண்டிருந்தாள். பிறப்பினும்

பிறவி துறப்பினும் தன் துணைவனாகின்றவனைத் தொழுத மாத்திரத்தில் மறக்க நேரிடினும்; இறக்க நேரிடினும் நன்று என்று சீதை எண்ணினாள்.

சீதை இராமனைக் காணலைக் 'கண்ணுற்றாள்' என்ற தொடரால் கம்பர் ஈண்டு குறிப்பிடுவது கருதத்தக்கது. கண்ணும் கருத்தும் நெருங்கிய தொடர்புடையன. இதனைக் கவிஞன் பல இடங்களில் குறித்துள்ளான்.

1 இருகண்ணி னுள்ளுங் கருத்துள்ளுங் காண்பெனல்
— மிதிலைக் காட்சிப் படலம் 140

2 என்னேக் கினுநெஞ் சினுமென் றுமுளார்
பால — கடிமணப் படலம் — 17

3 கண்கள் களிப்ப மனங்கள் களிப்சார்
பால — கடிமண்ப் படலம் — 96

4 பண்ணி னேக்குறு பராவ முதைப்பசுங்
கண்ணி னேக்கின ருள்ளங் களிக்கின்றார்
அயோத் — கங்கைப் படலம் 11

5 சிந்தையுள்ளும் விழியுள்ளுமுள னென்ற திறலோன்
ஆரண் — விராதன் வதை 16

6 கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனின.ஃதே
— ஆரண்ய — சூர்ப்பநகைப் படலம் 60

7 கருந்தடங் கண்ணு நெஞ்சுங்
களித்திட வினைய சொன்னாள் — யுத்த — மீட்சி — 55

8 நாட்டமும் மனமுந் நடுங்கா நின்றாள் மீட்சி—215

கண்ணிற்படுகின்ற பொருள், அதனால் கிளரும் சுவை யாதாயினும் கருத்தில் ஓரிரு வினாடியேனும் படாமல் இருப்பதில்லை. ஆனால் இவண் சீதை இராமனைக் கண்களால் மட்டுமே உற்றுப் பார்த்தாள். உணர்ச்சிக்கு நிலைக்களனான உள்ளம் இயக்கம் ஒழிந்து ஓய்ந்து போயிருந்தது. பத்துத் திங்களாய் அவள் கொண்டிருந்த ஒரே குறிக்கோள் புண்ணியமூர்த்தியாகிய தன் 'ஆசையின் கனி' யைக் காணும் ஆசை ஒன்றே இதனை ஐயந்திரிபின்றி அவள் இராவணனுக்கு எடுத்துக் கூறியுள்ளாள் இக்குறிக்கோள் அவனைக் கண்டு கண்கள் மழைபொழிய வணங்கி எழுந்த அளவில் நிறைவு பெற்றது.

இராமன் சீதையைக் காணலை அற்பினத் தலைவனும் அமைய நோக்கினன் எனக் கவிஞன் குறிப்பிடுகின்றான். உலகுக்கெல்லாம் அன்பு செய்கின்ற தலைவனை இராமபிரான் பத்துத் திங்களாய்த் தன்னை விட்டுப் பிரிந்திருந்த சீதையை நன்கு நோக்கினன். அந்நோக்கினை விவரிக்கப் புகுந்த கம்பன் 'பணங்கிளரரவென வெழுந்து பார்ப்புறு' என்பான் அடுத்து ஈண்டு இராமனுடைய நோக்கு சினநோக்கு. படமெடுத்தாடும் அரவு போன்று சினமுற்றுச் சீதையை நோக்கியதோடு அவள் மனம் புண்படுமாறு பல சொல்லலுற்றான். 'ஊண் உணவு உண்டனை, ஒழுக்கம் பாழ்படவும் மாண்டிலை, தீய நெறி ஒழுகும் அரக்கன் மனையில் வதிந்து அடங்கினை' என விசாரணை ஏதுமின்றிக் குற்றப் பத்திரிகை படிக்கும் இராமன், தானே சீதையை அழைத்து வருமாறு வீடணன் வாயிலாகப் பணித்ததை முற்றிலும் மறந்தவன் போன்று 'அச்சம் தீர்ந்திவண் மீண்டதென்? நினைவுதான் என்னை? யான் நின்னை விரும்புவன் என்றெண்ணமோ?' எனத் தொடங்கி 'உன்னை மீட்பான் பொருட்டுப் பகை கடந்திலேன். பிழை என்னை மீட்பாள் பொருட்டு இலங்கை எய்தினேன்' எனச் சீறுகிறான்.

மிதிலைக் காட்சிப் படல நோக்கில் நுவலல் இல்லை. விழி மொழி விடுத்து வாய்மொழி அவண் இடம் பெறாது போயிற்று, அவண் நோக்கே வாயிலாக அமைய சீதையினுட் புகுந்து அவளது கருத்தில் உறையும் கள்வனாய் அமைந்தான் இராமன், இம் மீட்சிப் படல நோக்கில் இராமனது சின மொழிகளைச் செவி மடுக்கிறோம். முன்னர் நிகழ்ந்த நோக்கின் விளைவாக 'இருவரும் மாறிப் புக்கிதயம் எய்தி — ஒன்றிய ஈருடற்கு உயிர் ஒன்றான — ஒருமித்த — சீரிய—அன்பு நிலையை 'உன்னை', 'என்னை' என — இராமன் இருவரையும் பிரித்துப் பேசும் நிலை முற்றிலும் தகர்ப்பதாக அமைகின்றது.

மிதிலைக் காட்சியில் சீதையை நோக்கிய அளவில் அவள் இடம்பெயர்ந்து தன்னுள் குடியேறியதாக இராமன் எண்ணினான். இவண் மீட்சிப் படலத்தில் அவளது பிறப்பு பற்றிய ஓர் ஆய்வு செய்ய முற்படுகிறான். 'குலத்தில் பிறந்தாயில்லை, அவ்வாறாயின் குலப் பெண்டிர் போன்று உயிர் கொடுத்துப் பழி துடைத்திருப்பாய் புழுப்போல நிலத்தில் பிறந்தமைக்கு ஏற்ப இன்னும் மாண்டிலை. நீ தோன்றியதனல் பெண்மை, பெருமை, பிறப்பு, கற்பு, ஒழுக்கம், தெளிவு சீர்மை, உண்மை எனும் நற்பண்புகள் யாவும் மாய்ந்தன' என்றெல்லாம் கூறிய இராமன் 'சாதி' அன்றேல் தக்கதோர் நெறி போதி' என

உள்ளங்கை நெல்லிக் கனி போன்று தன்பால் அவளுக்கு இனி இடமில்லை எனக் கூறிய கூற்று 'என் இரு கண்ணினுள்ளும் கருத்தினுள்ளும் காண்பெனுல்' என்ற முற்கண்ட சீரிய நிலைக்கு மாறிய முறையில் அமைவதைக் காண்க.

இராமனது சுடு சொற்களைச் செவிமடுத்த சீதையின் மன நிலை, அச்சூழலை அவள் எதிர்கொள்ளும் ஏற்றம் ஆகிய இவற்றினைக் கம்பன் காட்டும் பாங்கு கற்பாருக்குப் பேரின்பம் பயக்கும் ஒன்று. மிதிலைக் காட்சியில் இராமனது கண்ணிணையைக் கதுவி உண்ண முயன்ற சீதையின் கண்ணிணையினின்று, இவண் உதிரமும் புனலும் பாய்ந்தோடுகின்றன. இராமனது கண்ணிணையை நோக்க நினைத்தாளில்லை மண்ணினை நோக்குகின்ருள். முன்னைப் போன்று உணர்வு ஒன்றிடவில்லை இவண் உள்நினைப்பு அவிந்து மனம் மரத்துப் போயிற்று அதன் வெளிப்பாடாகப் பெருமூச்சும் கிளர்ந்தது.

இராமனது கேள்விகளுக்கு நேரிழையாள் சுற்றி நின்றவர்களை நோக்கியவாறு நேரிடையாகவே பதிலிறுக்கிருள் 'இவண் வந்ததென்னை?' என்ற இராமனது வினவிற்குச் சீதை நின் தூதுவனை மாருதி என்னை 'ஈண்டு சாருதி' எனச் சமையச் சொல்லினுன். தூது பொய்ப்பதில்லை அதினும் யாரினும் மெய்ம்மையான் விடுத்த தூது பொய்ப்பதெங்ஙன்? அவன் தூது அல்லனே எனச் சோரும் என் நிலை யான் இத்தனை காலமும் உழந்த என் நலமும் கற்பும், நீ மனத்து உணர்ந்திலாமையால்; பித்தெனலாயது அங்ஙனம் நீ உணராமைக்குக் கரணியம் மங்கையர் மனநிலை தேவராலும் உணரற்கு அரியது என்பதே எனச் சீதை விண்டுரைக்கும் செம்பொருள் காலத்தால் சாவா உண்மையாக அமைகின்றது

தொடர்ந்து சீதை இராமனுக்கு அறைகூவல் விடுக்கிருள். 'யான் பார்க்கெலாம் பத்தினி. பதுமத்தானுக்கும் பேர்க்கலாம் சிந்தையளல்லேன்' எனச் சீதை கூறுமிடத்து 'என் பத்தினித் தன்மையைப் படைப்புக் கடவுளான அந்தப் பிரமனுலும் மாற்ற முடியாது' எனச் செம்மாந்து பேசுகிருள். 'ஆயினும் நீ அன்றென்ருல் இஃது தீர்க்கக் கூடிய சிக்கல் அன்று' 'நீயே அறியாயாயின் வேறு தெய்வம் அறிந்து கொள்ளுமோ?' என முழங்கியவளை முடிவாக "ஒரு தீர்மானத்துடன் ஆதலாற் புறத்தினி யாருக்காக வென்கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன்' என வினவுமிடத்து 'இராமனைத் தவிர வேறொருவராலும் தனக்கு ஆக வேண்டுவதொன்றில்லை' எனும் செருக்கும் சிறப்பும் மிளிர்கின்றன.

மிதிலைக் காட்சியில் இராமனோடு கூடி வாழத் துடித்த சீதை இவண் 'சாதலிற் சிறந்ததொன்றில்லை, தக்கதே. அது நின் பணி; என் விதியுமாகும்' என்கின்ற இடத்துக், கவிஞன் சீதையின் இன்பதுன்ப உணர்வுகளின் ஏற்ற இறக்கத்தினை. அழகொளிரப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

சீதை தீக்குளித்த காலை, அங்கியங் கடவுள் 'வேறு தெய்வம் தேறுமோ' என அவள் முன்னர் மனம் நொந்து கொண்ட ஆற்றாமை தீருமாறு, இடைப்பட்டு ; அவள் சார்பில் 'பழிப்பிலள்' எனச் சான்று பகர்ந்தான். தன்னை நோக்கி அங்கியங் கடவுள் கூறிய கூற்றுக்கு மறுமொழியாக ; இராமன் ' இனிப் பழியுமன்று. கழிப்பிலள். என அவளது சான்றினை ஏற்றுக் கொண்டான். தேவர்கள் இடையிட்டுப் பிரமன் வாயிலாக இராமனுக்கு அவனது உண்மை வடிவினை உணர்த்துமாறு வேண்டினர். சிவபெருமான் தசரதனை வானினின்று அனுப்பி இராமனைத் தெருட்டுமாறு பணிக்கிறான்.

இராமனது சீற்றத்திற்கான நோக்கம் சீரியது. அஃது 'நங்கை கற்பினை உலகுக்கு நாட்டவே' எனக் கூறிய தசரதன் அத்துடன் நின்றானில்லை. தனக்கு நேர்ந்த சோதனை முறையைச் சீதை 'மனத்தடைக்கக் கூடா'தெனவும் 'கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்' எனவும் அவன் கூறுவது, ஒரு பெண்ணுக்கு இதனை மறப்பது அரிது ; இத்தகைய கடுமையான நெருக்கடி நிலையினை ஏற்படுத்தியமைக்காக முனிதல் இயல்பு, என்பதையும் உணர்ந்து, உள்ளடக்கிக் கூறியதோ எனவும் எண்ண இடமுளது

சீதையின் நிலத்தில் பிறந்த நிலைமை குறித்துக் குத்திக் காட்டிப் பேசிய. இராமனது சொற்களுக்கு மாற்றாகத், தசரதன் கூறும் 'மண் பிறந்தக முனக்கு நீ வானின்று வந்தாய் ' என்ற விளக்கம். சூர்ப்பநகை வாக்கில் கிளர்ந்த

'நீர்தந்த ததனைவெல்வா னிலந்தந்து
நிமிர்ந்த தன்றே' என்பதனை எதிரொலிக்கிறது.
சூர்ப்பநகை சூழ்ச்சி — 78

இந்நிலைகளில் எல்லாம், இராமன் சீதைபால் அவளது மனச்சுமை மாறுமாறு ஏதும் பேசியதில்லை. குறிப்பாக வேனும் ஏதும் செய்ததில்லை. எனவே விடணன் முதலியோர் இராமனிடம் விடைமறுத்து அவனுடன் செல்ல அனுமதி கோரி,

இராமனருளால் பெற்ற மனித வடிவுடன் விமானம் ஏறியதை உடனிருந்து நோக்கினும், தனக்குத் தாயினும் அன்பினளாய திரிசடையையும் தன்னுடன் அயோத்தி அழைத்துச் செல்லும் விருப்பம் அகத்தே ததும்பி இருப்பினும், இராமனது மனநிலை பற்றிய ஐயுறவால் ஏதும் பேசாது இருந்தனளோ; என ஊகிக்க இடமுளது. ஏன் எனில் விமானம் வடக்கு முகமாகத் திரும்பிய போது இராமன் சீதையைப் பார்த்துப் பேசுகிறான். அதன் பின் சீதை தான் முன்பின் கண்டறியாத வாநர மகளிரைத் தன்னுடன் அயோத்தி அழைத்துச் செல்ல விழைந்து, இராமனிடம் அவ்விழைவினைத் தெரிவிக்கின்றதை எண்ணுங்கால், தனக்கு அளப்பரிய ஆறுதல் செய்து: உடன் உறைந்து, உற்ற துணையாய அவ்வன்புத் தோழியையும் உடன் அழைத்துச் செல்ல விழைந்திருத்தல், இயல்பும் ஏற்புமுடைத்து.

முன்னர் பாலகாண்டத்தில் தனது கழல் துகள் கதுவ பண்டை வண்ணம் பெற்றெழுந்த அகலிகையை 'விலைமகளனைய நீயும் கல்வியலாதி 'என முனிந்த கோதமன் பால்' அன்னை நீ படருராதே போதி, மாதவன் அருண்டாக வழிபடர்' என அனுதாபத்துடன் அறவுரை பகர்ந்து வழிகூட்டி வணங்கி அனுப்பிய இராமன், தன்னடியில் தாழப் பணிந்து எழுந்த கற்பின் கனலிக்கு அளித்த 'வரவேற்பு' அவள் நெஞ்சத்தைப் பெருந் துயரினும் திகைப்பிலும் ஆழ்த்தி வீழ்த்தி விட்டிருத்தல் கூடும்

அது பற்றியே, அகிலமும், அங்கியங் கடவுளும், மாண்டு மீண்டு வந்த தசாதனும், நிரவு செய்த பின்னரும்; சீதையின் மனச்சுமை மாறவில்லையோ, அவளைப் பிடித்திருந்த திகைப்பினின்றும் அவள் மீளவில்லையோ, அது பற்றியே திரிசடையை உடன் அழைத்துச் செல்வது பற்றி. அவள் அந்நிலையில் தானாக இராமனிடம் உரையாற்ற முற்படவில்லையோ, என்றெல்லாம் பல விநக்கள் கற்பார் நெஞ்சில் கிளரலும் இயல்பு

இதுகாறும் கூறியவற்றால் மிதிலைக் காட்சியில் காதல் நோக்கும் அதன் நோக்கமாக மன உறவும் மண உறவும் அமைந்தமையும் மீட்சிப் படலத்துச் சின நோக்கின் நோக்கமாகக் கற்புறுத்தல் அமைந்தமையும், அதன் விளைவாகச் சிறிது பொழுதேனும் மனமுறிவும் மணமுறிவும் ஏற்பட முனைந்தமையும் போதரும்.

காதலும் கருத்தும்

செஞ்சொற் கொண்டல், புலவர்,
டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ. பிஎச். டி.
(அ. வ அ. கல்லூரி, மாயூரம்)

சொல்லும் கருத்தும் :

உள்ளத்தில் கருதுகின்ற கருத்து ஒவ்வொன்றும் சொல் ஆகின்றது ; அச் சொல் வெளிப்படும்போது, அக்கருத்தை உணர்த்த முற்படுகின்றது. அக்கருத்தைத்தான் பொருள் என்று கூறுகின்றோம். சொல்லும் பொருளும் உடன் தோன்றுகின்றன ; அவ்வாறே உடன் வெளிப்படுகின்றன. சொல் வெளிப்பாடு ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு வகை. அது அவரவர் நிலைக்கேற்ப அமைகின்றது. அவ்வமைப்பினுல் பல்வேறு பாகுபாடுகள் இவ்வெளியீட்டில் அமைந்துவிடுதலை இயல்பாகக் காண்கின்றோம். சிலர் வெளியீடு சுவையாக அமைவதையும், சிலருடையது அழகின்றி அமைவதையும் காண்கின்றோம். கருத்துவளம் உடையவர்கள் சிலர். வெளியிடும் திறன் இன்றி அமையக் காணலாம். கருத்துவளம் இல்லாதவர் சிலர் வெளியிடும் திறன் பெற்று விளங்குவதையும் பார்க்கலாம்.

கவிஞர்கள் திறன் :

இயல்பான மனிதர்களை விடக் கவிஞர்கள் என்று கூறப்படும் தொகுதியினர் அழகாகச் சொற்களை வெளியிடும் திறன் உடையவர்களாய் விளங்குகின்றனர். நமக்குத் தெரிந்த சொற்கள் தாம் ; நாப் கையாளும் அகராதியில் பழகும் சொற்கள் தாம்: நம்மோடு உடன் உறையும் தன்மை உடையவைதாம். அவை கவிஞர் வழியே வெளியிடப் பெறும்போது தனியழகுடன், பொலிவும் வலிவும் பெற்றுப் புத்தொளி வீசுகின்றன. 'இதைவிட வேறு வகையாக இதனைக் கூறமுடியாது' என்று முடிவெடுக்கும்படி மொழியும் இவ்வியத்தகுபேறு கவிஞர் அனைவர்க்கும் 'உண்டு என்று உரைக்கவும் இயலவில்லை ; சிலர் இத்திறன் பெற்று நிலைத்த நெடும்புகழ் பெறுகின்றுர்கள். வேறு சிலர் இதனைப் பெற முயல்கின்றுர்கள் ; வெற்றியும் எய்துகின்றுர்கள். வேறுசிலர் முயல்கின்றுர்கள் ; வெற்றி பெருமலேயே வீழ்ந்து விடுகின்றுர்கள். எப்படிப் பார்த்தாலும் கவிஞர்களின்

சிறப்புத் திறனாக இது விளங்கிடக் காணலாம்: இப்பொது உண்மை எல்லா மொழிப் பாவலர்கட்கும் பொருந்துகின்ற ஒன்றே ஆகும்.

திறனாய்வோன் திறன்:

இந்தத் திறனை முதலிற் தான் உணர்தல் ஒரு திறனாய்வாளனின் கடமையாகும். இதனைப் பிரித்துணர்ந்து தெளிந்து பின் அதனை மற்றவர்கட்கு எடுத்துணர்த்துவது அவனுடைய இரண்டாவது கடமையாக அமைந்துள்ளது. திறன் ஆய்ந்து தெளிபவர்கட்குரிய இரண்டு கடமைகளை அவர்கள் மறந்து விடலாகாது. இவ்வாறு கவிதைக் கலையில் விளங்கும் இந்த உண்மை. தக்கோர் கையாளும் உரை நடையிலும் ஒளிர்வது தான் ஆனால். உரை நடையில் இது. கவிதையைவிடச் சிறிய அளவில் குறைந்தே காணப்படலாம்.

சுவைபெறச் சொல்லுதல்:

சொல்லுவதைச் சுவைபெறச் சொல்லும் இவ்வகைத் திறன் உடையது எதுவோ அது இலக்கியமாம். இலக்கிய மதிப்பும் தரமும் உடைய எவ்வகை வெளியீட்டிலும், — அது கவிதையாயினும், உரை நடையாயினும், இதனைக் கண்டு இன்புறலாம்.

அநுபவம் உரைத்தல்:

இன்ப வாழ்க்கையில் ஈடுபட்ட ஓர் இதயம் பேசுவதாகக் கற்பனை. தான் பெற்ற இன்பத்தைச் சொற்களில் காட்ட முயலும் அவ்விதயம் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்ட பின்னரே அதனைச் சொல்லியிருக்க முடியும் அழகிய தோள்களை, அந்த மங்கை நல்லாளுடைய இனிய தோள்களை, நிறத்தாற் கனிந்த தோள்களை முயங்கிய ஆண் உள்ளம் அது அந்த இன்பத்தை எடுத்துரைப்பது என்பது ஓர் அரிய செயலே. ஏன்? இன்பம் சொற்களைக் கடந்த அநுபவம் அதனை உணர்ந்திட வேண்டுமேயன்றி, உரைத்திட வொண்ணாப் பெருநிலை உடையது. அதனையும உரைத்திடும் திறன் கவிஞன் படைக்கும் அப்பாத்திரத்திற்கு வரப் பார்க்கின்றோம்.

உழைப்பால் உயர்ந்தவன் அந்த ஆண் மகன்; தன் கைகளால் உழைத்து நலம் கண்ட நம்பி; தன்னுடைய மனையில் இருந்து, தான் உழைத்துச் சேர்த்த பொருளைத் தான் ஒருவனே இருந்து உண்ணும் நிலை, அந்தத் தலைமகனுக்கு இருந்

தது இல்லை. எதனையும் பகுத்துண்ணும் பரந்த உள்ளம் உடைய பண்பாளன் அவன். பிறர்க்கு ஈந்து மனம் மகிழும் பெருங்கொடை வள்ளலாகப் பிறங்குபவன். 'பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்ற உண்மையை உணர்ந்தவன். அந்த அநுபவம்-அதில் விளைந்த பெரு மகிழ்ச்சி அநுபவம் அவன் நினைவில் இப்போது எழுகின்றது. தான் புதிதாக இப்போது அநுபவிக்கும் மங்கையின் உடல் தழுவும்போது உண்டாகும் பேரின்பத்தையும் முன்னே பகுத்துண்டு மகிழ்ந்தபோது விளைந்த மகிழ்ச்சியையும் ஒப்பிடுகின்றான் அவன், ஆம்; அவனுக்கு இந்த அநுபவத்தை, அகப்பொருள் அநுபவத்தை, பிறர்க்கு 'இன்ன தன்மை உடையது' என்று உணர்த்த இயலாத பேரநுபவத்தை எடுத்துரைக்க வார்த்தைகள் கிடைத்து விட்டன. தான் உணர்ந்ததை அவனால் அழகு பெற உணர்த்தவும் சொற்கள் துணைக்கு வந்துவிட்டன: விளைவு? கீழ்வரும் இனிய கவிதை :

> "தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு."

இந்தக் கவிதையில் பெரும்பாலான வார்த்தைகள் நமக்குப் பழக்கம் ஆனவையே. தம், இல்(லம்), இருத்தல். பாத்தல், உண்டல், அம் மா, அரிவை, முயக்கு — எளிய இனிய. சிறிய சிறிய சொற்கள், தேவைப்பட்டால் பாத்தல் (பகுத்தல்) முயக்கு (தழுவல்) ஆகிய இரு சொற்களுக்கு மட்டும் சிலர்க்குப் பொருள் உணர்ச்சி தோன்றாமல் இருக்கக்கூடும். சொற்கள் உணர்ச்சி வெள்ளத்தில் அரும்புகுன்ற நிலை ஆதலின் நெடுஞ்சொற்கள் இப்பாட்டில் இல்லை: எல்லாம் ஓரசை ஈரசைச் சொற்களே. இவற்றை எடுத்து வெளியிட்ட முறையும், ஒழுங்கும், மெய்ப்பாடும் சேர்ந்து ஓர் ஒப்பற்ற கவிதையினை உருவாக்கி விட்ட அற்புதம் இங்கே நிகழ்ந்து விடுகின்றது.

காதலும் கருத்தும் :

ஓர் 'ஓரங்க நாடகமே' இந்தச் சிறிய கவிதையில் நிகழ்ந்து விடுகிறது. பொது மறையாகிய திருக்குறளில் இப்படிப் பல விழுமிய கவிதைகளைக் காண்கின்றோம். காமத்துப் பாலைக் களமாகக் கொண்ட இக் கவிதையில், பழுத்த அநுபவம் வாய்ந்த கவிஞர் பிரானாகிய வள்ளுவர் மெல்ல மெல்ல அறத்தையும் கூறி விட்டார். கூர்ந்து நோக்கினால், ஒன்றித்துச் சிந்தித்தால், 'ஆம்' இந்த வள்ளுவர்க்குத்தான் எவ்வளவு பேராற்றல்,' இன்பம் கூற வந்த விடத்து, எத்துணை நுட்பமாக அறம் கூறிவிட்டார்'

என்று வியக்கத் தோன்றும் எத்தவத்தைச் செய்தாலும், முத்தர் மனம் மோனத்திலே நிற்கும்; அதுபோல் காமம் பாடப் புகுந்த போதும் இந்த உயர் பெருங் கவிஞர்க்கு 'அறம், என்ற அடிப்படைச் சுருதியிலேயே மனம்' ஒன்றி நிற்றலை உணரலாம்.

'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படும் தோற்றம் போல'

என்ற சங்கப் புலவர் மெய்யுரையின்படி, அறம் பிறழா இன்பமும், அறம் பிறழாப் பொருளுமே சான்றோரால் சாற்றப்பட்டவை என்ற பொருள் நுட்பமும் இங்கே பூத்து நிற்கின்றது. 'அறத்தான் வருவதே இன்பம்' என்ற குறள் முதல் உரையும், 'அறத்தோடு பெருந்தி வருவதே இன்பம் ஆவது' என்ற உரை நலமும் நினைவில் எழுகின்றன 'தம்முடைய மனையில் இருந்து, தாம் உழைத்துச் சேர்த்த நற்பொருளைத் தாம்மட்டும் தனித்திருந்து நுகராது பல்லோரும் பகுத்துண்ணும்படித் தந்து தாமும் நுகர்தலே பேரின்பம் பயக்கக் கூடியது' என்ற மெய்ம்மை உவமை கூறுமுகத்தான் உள்ளத்தே நாட்டப்பட்டு விட்டமையை நாம் அறிந்து வியக்கலாம்.

சில மருத்துவர்கள் நோயாளிகளிடம் மெல்ல உரையாடிக் கொண்டே, அவர்கள் அறியாதபடி ஊசி மருந்து முதலிய வற்றைச் செலுத்தி விடும் திறன் உடையவராய் விளங்குவதை உலகியலிற் காண்கின்றோம்; இனிய பேச்சில் தம்மை மறக்கச் செய்து, வலி தெரியாமல் மருந்தை உட்புகச் செய்து விடும் சீரிய அநுபவப் பாங்குடைய அத்தகு மருத்துவர்களை நினைப் பிக்கின்றது இக்கவிதை அமைப்பழகு,

மற்றுமோர் ஆழ்பொருள் :

தலைவியின் முயக்கத்தைப்பற்றி இத்தகு அற உணர்வுடன் கூறி மகிழும் தலை மகனின் கூற்றாக ஆசிரியர் அமைத்துள்ள அமைப்பு மேலும் ஓர் ஆழ் பொருளையும் உள்ளடக்கியதாக உள்ளது. தலைவியின் முயக்க இன்பத்திலேயே மூழ்கித் திளைத்து இரண்டறக் கலந்து விடுவானே ஆயின். பின்னும் அவனு டைய பேராண்மைப் பெருவாழ்விற்கு இழுக்கு வந்து விடும். ஆதலின், அவ்வொப்பற்ற இன்ப நிலையினின்று மெல்ல விடு பட்டு, அதனை யடுத்து ஆற்ற வேண்டிய கடன் முறைகளில் ஈடுபட்டுச் செயலாற்ற வேண்டிய அவனுடைய செயல்வளத்தை யும் நினைவூட்டி விடுகின்றார் அவன் வெளியிடும் சொற்களின்

வழியாக, களவு வழியே தலைவியினை அடைந்து இன்புறும் நிலை கற்பின் வழியே அவளைக் கரணத்தாற் கொள்ளும் நிலைக்குத் தூண்டுகோலாக அமைதல் வேண்டும் அன்றோ? தானும் அவளுமாய் இல்லற வாழ்வு தலைப்பட்டு, தாம் உழைத்துச் சேர்த்த ஒண் பொருளால், 'அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின், விருந்து எதிர் கோடலும்,' முதலிய அனைத்தும் ஆற்றுதல் வேண்டும் என்ற நினைவையும் தூண்டுவதாக உள்ளது இங்கு இத்தலைமகன் எடுத்துக் கூறி மகிழும் இனிய உவமை ஆகவே, தான் முன்பு பெற்றதையும், இனி தான் பெறத் தக்கதையும் ஆக இரண்டு கால இயல்புகளைச் சுட்டுவதாக இச் செய்தி அமைவதை உணர்ந்து மகிழலாம். 'சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும் எதிர்காலத்தின் சிறப்பையும்' எடுத்து உணர்த்தும் இனிய திறன் இக்கவிதையின் செம்பாதியாகத் திகழ்தல் உணருந்தொறும் உணருந்தொறும் புதுப்புதுக் கருத்து நயங்களை அள்ளி வழங்குவதாக உள்ளது.

குறளிற் பல கவிதைகள் :

மங்கை ஒருத்தியைத் தழுவி மகிழும் ஓர் இனிய உள்ளத்தின் எழுச்சி மிகுந்த ஆண் குரலை இதைவிடச் சுவையாக எடுத்துரைக்க இயலாது அன்றோ? கூறிக் கூறி மகிழும்படி காதலுடன் இனிய கருத்தையும் இணைத்து இதனைத் தீட்டியுள்ள தெய்வக் கவிஞரின் திறன் சொல்லுக் கடங்காதது எத்தனையோ வரிகளால் உணர்த்த வியலாததாக உள்ள நுண்பொருளை உணர்த்த எடுத்துக் கொண்ட முதற் பாவலர், சில சொற்களிலேயே இதனை உணர்த்திவிட்ட ஆற்றல் எல்லாக் கவிஞர்கட்கும் அருமையாக உள்ள தனிப் பண்பு ஆகும். இத்தகு கவிதைகள் பலவற்றை, — கற்பனைப் பண்பும், விழுமிய உணர்வும், திறன்மிகு வெளியீடும், உடைய ஓவியங்கள் பலவற்றை உடைமையாலேயே திருக்குறளை அறநூல் என்று மட்டும் கூறிட இயலவில்லை; அது ஒரு கவிதைக் கருவூலம் என்றும் கொள்ளுமாறு உள்ளது. இதனை மெய்ப்பிக்க இக்குறளைப் போன்ற பலவற்றை எடுத்துக் காட்டலாம்.

உயிர்மெய் ஒலிகளுக்கு உருவம் வேண்டுமா?

பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன், பி. எசி., எம். ஏ.

மொழிக்கு மூதற் காரணமாக இருக்கும் ஒலியினைத் தான் 'எழுத்து' என்று அழைக்கின்றோம்: அவ்வகையில் உயிர் ஒலிகளும் மெய் ஒலிகளுமே உண்மையில் எழுத்தொலிகளா கும் 'உயிர்மெய் ஒலி' என்பது உண்மையில் வெறும் கூட் டொலியே ஆகும். ஒரு முறை ஒலிக்கப்பட்ட ஒலியைத் தேக்கி வைத்துத் திரும்பக் கேட்க வழியில்லாத ஒரு காலமும் இருந்தது அந்நிலையில் காதால் கேட்டு மட்டுமே உணரக் கூடிய ஒலியைக் கண்ணால் கண்டும் நினைவிறுத்திக் கொள்ளும் ஒரு வழியாகச் சில அடையாளக் குறியீடுகளை உண்டாக்க வேண்டி நேர்ந்தது. அந்தக் குறியீட்டு வரி வடிவத்தையும் இன்று 'எழுத்து' என்று சொல்கின்றோம் இன்று பேச்சினைப் பதிவு செய்ய இசைத்தட்டு. நாடாப் பதிவு, ஒளிமின்பதிவு போன்ற கருவிகள் உருப்பெற்று விட்டன. எனவே, இன்று எழுத்து வடிவத்திற்கு இருந்த இன்றியமையாமை குறைந்து விட்டது. இன்னும் சொல்லப்போனால் இன்று பழஞ்சேர நாட்டை மலையாள மொழி நாடாக மாற்றிப் பிரித்து வைத் திருப்பதற்குப் பெரிதும் காரணமாக இருப்பது எழுத்து வடி வமேயாகும் இன்று 'ஊண் கிட்டும்' என்று சொல்வது 'தமிழ்' என்று யாரும் நினைவுறுத்த வேண்டுவதில்லை; இருந்தாலும் ★ (ஊண் கிட்டும்) என்று உணவு விடுதிகளில் எழுதியிருப்பதைப் பார்த்து அது மலையாளமோ என்று மனங் குடிம்பி விடுகின் றோம். தமிழ் நாட்டினும் கூட 'ஊண் கிட்டும்' என்று தமிழ் எழுத்துக்களில் எழுத விரும்பாதவராகி, 'சாப்பாடு போடப் படும்' என்று வரைந்து தள்ளி விடுகிறோம்: ஆம் 'கிட்டா தாயின் வெட்டென மற' என்ற பழமொழியும் நம்மிடம் இருக் கக் 'கிட்டும்' என்பதையே வெட்டென மறந்து விட்டோம்! 'பத்துப் பாட்டு'ப் புத்தகத்தையும் எட்டுத்தொகை புத்தகத் தையும் வைத்து 'சரசுவதி பூசை' செய்வதை விடப் 'பத்துப் பாட்டு' பதிவு செய்த நாடாவையும், 'எட்டுத்தொகை' பதிவு செய்த நாடாவையும் சுழற்றித் தமிழ்பரப்பும் 'டேப் ரெகார்டரை' வைத்து 'ஆயுத பூசை' செய்வதிலே இன்றைய தமிழர்கள் மகிழ்ச்சி கொள்வதில் வியப்பதற் கொன்றுமில்லை. கண்ணைக் கொண்டே தானு கல்வி கற்க வேண்டும்? காதைக் கொண்டும் கற்கலாம் அன்றோ?

★ 'ஊணுகிட்டும்'' என்ற சொற்கள் மலையாள மொழியில்

ஆம்,

'மலையப்புலையன் அம் மாடத்தின் முற்றத்து
மழை வந்த நாளொரு வாழை நாட்டு'

என்ற சங்கம்புழாவின் பாடலை எழுத்துருவில் காட்டும் புத்தகத்தை இன்றைய தமிழர்களால் படிக்க முடியாது. ஆனால் அதே பாடலை நாடாப் பதிவு செய்து மீண்டும் ஒலித்துக் காட்டும் போது அது தமிழ்ப் பாடலாகவே இனிக்கிறது: இவ்வளவு தான் இன்று நம் வரி வடிவு எழுத்தின் மதிப்பு நிலை: இந்த நேரத்தில் தமிழிலேயே இல்லாத ஙா, ஙி, ஙீ. ஙு. ஙூ. ஙெ, ஙே ஙை. ஙொ, ஙோ. ஙௌ போன்ற ஒலிகளுக்கெல்லாம் எழுத்து என்ற பெயரில் உருவங்களைக் கற்பித்துக் கொண்டும் நம் சிறுவர்களுக்கு 'ங' போல் வளையக் கற்றுக் கொடுத்து வந்தது போதும். இனிமேல் 'ஙயம்பட உரைப்பதை நலமுறையில் எழுதக் கற்றுக் கொடுப்பதே கல்வியாளர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாகும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

எழுத்தாணியும் ஓலையும் பழந்தமிழரின் எழுது கருவிகள் என்ற அளவில் அவற்றிடத்து மதிப்புக் கொண்டிருப்போம். ஆனாலும் அவற்றை வள்ளுவர் கையிலே கொடுத்து வண்ண ஓவியம் அமைப்போமேயல்லாது நம் கையிலே ஏந்தி நின்று நகைப்பிற்கு இடமாகி விடமாட்டோம். எழுதிய ஆணி மறைந்து எழுதுகின்ற ஊற்றுப் பேனா வந்ததுமே நம் எழுத்துக்களில் பல மாற்று வடிவம் கொண்டு விட்டன அத்தகைய மாற்றமும் யாருடைய விருப்பு வெறுப்பினையும் பற்றிக் கவலைப் படாமல் நிகழ்ந்துள்ளது கல்வெட்டில் காணும் எழுத்துக்களும் கூடக் கால வெள்ளத்தின் ஓட்டத்திற்கேற்ப நெளிந்து வந்திருப்பதைக் காண்கின்றோம்! இறுதியில் வெளிநாட்டிலிருந்து போந்த ஜோசப் பெஸ்கி எகரஒகரத்தின் தலைச் சுழியை மாற்றி நெடிலுக்கு முறையே கீழ்க்கோடும், சுழியும் சேர்த்து 'எகரஒகரத்தின் இயற்கையும் இற்றே' என்று நிலை நாட்டி வீரமா முனிவராகத் திகழ்ந்தார். எழுத்துக்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் பற்றி எதுவும் அறியாத நம் மக்கள் இன்றும் 'தொல்லை வடிவின் எல்லா எழுத்தும்' என்று மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எழுது கருவிகளும் எழுத்துருவங்களும்.

எழுத்தாணி ஓலையில் நகர்ந்தது போலவே சிற்றுளி கல்லில் நகர முடியும் என்று எண்ணுவது அறியாமையாகும். ஓலை ஏந்தி நிற்கும் எழுத்துருவங்களுக்கும் கல் தாங்கி நிற்கும் வரி வடிவங்களுக்கும் வேறுபாடுகள் இருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம் எழுது கருவிகள் மாறும்போது எழுத்துருவங்களும் மாறித்தான் ஆக வேண்டியுள்ளது. எழுத்துக் கலையைப் பொறுத்தவரையில மண்ணூழியும். கல்லூழியும், ஓலையூழியும், கடந்து இன்று காகித ஊழிக்கு வந்து விட்டோம். காகித ஊழியிலும் பேனாவில் எழுதுவதினும் அச்சையும், தட்டச்சையும் பயன்படுத்தினால் மட்டுமே எங்கும் தமிழ், எதுவும் தமிழ் என்ற ஆட்சி மொழித் திட்டத்தை வெற்றியடையச் செய்ய முடியும் என்ற ஒரு நெருக்கடியான நிலையிலும், இப்பொழுது நின்று கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் நாம் ஒரு காலத்தில் எழுத்தாணியை வேகமாகச் சுழற்றி ஓலையை விரைந்து நகரச் செய்வதற்காகக் கற்பித்துக் கொண்ட தலைச் சுழியும், கொம்பும், காலும், மேல் விலங்கும், கீழ் விலங்கும், இன்று தட்டச்சின் சட்டத்தினை நகராமல் மரணப்பிடி (Dead Key) யிட்டு நிறுத்தி வருவதையும் கண்டு வருந்துகின்றோம். அச்சுக்கோப்பவர் கொம்பையும், காலையும் மேல் விலங்கையும் கீழ் விளங்கையும் தனித் தனி எழுத்துக்களாகக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முயன்றாலும் மெய்யெழுத்துடன் 'உ' கர 'ஊ' காரங்கள் ஒன்றும் இடங்களில் செயலற்றுத் தனியுருவங்களைத் தேடி மூச்சுத் திணறுகின்றார். பெரியவர்களின் பிழைகளான கு, டு. மு ரு, மூ ஆகிய வடிவுகளும், ங, சு. பு யு. வு ஆகிய வடிவங்களும் நு, ணு. து. நுலு, றுனு ஆகிய வடிவங்களும் ளு என்ற வடிவமும் சிறுவர்களை மருட்டிப் பொறுமைக் கலன்கலாக மாற்றுகின்றன. இன்று கற்றவர்களில் பகுதிக்குமேல் 'ளு' என்று எழுதுவதை விடுத்து ளு என்றே எழுதுகின்றனர் எழுதட்டுமே என்ன குறைந்து விடப்போகிறது? 'ளஉ' என்று தானே எழுதி முன்னேறிவிடக் கூடாது! அவ்வாறே 'ஊ' காரம் ஒன்று மிடங்களிலும் பெருங் குழப்பத்தைக் காண்கின்றோம். டூ, மூ, ரூ மூ ஆகியவற்றின் பாணியில் 'கூ' என இருக்க வேண்டுவது தானே நெறியாகும். ஆனால் கூ' ஆகி விடுகிறது அவ்வாறே நூ, பூ. யூ. வூ ஆகியவற்றின் பாணியிலே தானே 'சூ' வும் இருக்கவேண்டும் ஆனால் ஏனோ சூ ஆகி விடுகிறது. இந்நிலையில் 'ளூ' என்று எழுதாமல் 'ளூ' என்று கால் வாங்குகிறவர்களிடம் யார் தாம் குற்றம் காண முடியும்? திரு

வாளர்கள் ஞு, ணா. து. நூ. லூ, றா. னு ஆகிய வடிவழ கர்கள் காலறுந்து விடாமல் தானே இருந்து வருகின்றனர்? ஆனாலும், 'க' கர மெய்யையும் 'உ' கர உயிரையும் ஒன்றச் செய்து 'கூ' கார நெடில் என்று சொல்வமே தவிர 'கஉ' கரக் குறில் என்று கொள்ள மாட்டோம் என்பது தான் நம் கொள்கையாக (பிடிவாதமாக) இருக்கின்றது.

தந்தை பெரியாரால் தமிழ் திருந்தியது.

தந்தை பெரியார் அவர்கள் தமிழர்களைப் பகுத்தறிவுப் பாதையில் செலுத்தியதோடு தமிழ் எழுத்துக்களையும் பகுத்தறி வுக்கேற்ற முறையில் சீர்திருத்தி செம்மைப்படுத்தினர். ணு, ஞு, று என்ற படிவங்களை ஒழித்து ணா, னா, றா, என்றெ ழுதும் முறையைப் புகுத்தினர். ணை, லை, ளை, னை என்ற விதி விலக்குருவங்களை விடுத்து ணை, லை, ளை, னை எனப் பொது வடிவங்களாக்கினர். இன்று தமிழ் கற்க வரும் வெளி நாட்டினர்கள் தந்தை பெரியாரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி மகிழ்கின்றனர். ஆனால் நாமோ நம் சிறுவர்கள் இயற்கையாக 'விடுதலை' எழுத்தை எழுதினால் அப்படி எழுது வது தவறு என்று சொல்லி அவர்களைப் பழைய கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு இட்டுக் சென்று விடுகின்றோம். இன்று அச்சம் தட்டச்சும் தோன்றி விட்ட காலத்தில் நம் குழந் தைகள் இருக்கின்றார்கள் என்பதை அன்று எழுதிய முறையை மாற்றி எழுதலாமா என்று மயங்குகின்றவர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அம்மையப்பரும் அர்தநாரீசுரரும்.

எழுத்தறிவு என்பது பள்ளிகளும், நூலகங்களும் பெருகி இருக்கும் இந்நாளிலும் நூற்றுக்கு முப்பது என்ற அளவி லேயே உள்ளது. பழங்காலத்தில் மண்ணிலும், கல்லிலும், ஓலையிலும் குறியிட்டு எழுதி வந்த காலத்தில் எழுத்தறிவு என் பது மிகச் சிலரின் தனியுடைமையாகவே இருந்திருக்க முடியும். பள்ளியில் சேர்ந்து எழுத்துருவங்களைப் பார்த்து ஒலிக்கக் கற்றவர்களும் கூடப்பள்ளி நீங்கித் தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் மீண்டும் எழுத்தறியாமை இருளில் ஆழ்ந்து விடு வதைக் காண்கின்றோம். இந்திய நாட்டில் எழுத்தறிவில்லார் விகிதம் மிகுதியாக இருப்பதற்கு நம் எழுத்துருவங்கள் அறி வியல் அடிப்படையில் அமையாமல் இருப்பதே காரணம் என் பதை இன்னும் நம் கல்வியாளர்கள் உணராமல் இருப்பது

வ்ருத்தத்திற்குரியதாகும். எழுத்துக்களைத் தமிழ் மக்களாகிய நாம் இடமிருந்து வலமாக எழுதிச் செல்லுகின்றோம். மெய் ஒலியை அடுத்து உயிர் ஒலி வரும் போது மெய்யொலிக்கு உரிய எழுத்தை எழுதி, அதனை அடுத்து உயிர் ஒலிக்குரிய எழுத்தை எழுதுவதே அறிவியலுக்குப் பொருத்தமானதாகும். அப்படிச் செய்யாமல் மெய்யெழுத்தின் மேலுள்ள புள்ளியை அழித்து அதனை எந்த வித ஒழுங்கு முறையுமின்றி மேலும் கீழும், வலப்புறமும், இடப்புறமும் எழுதுகோலை ஒட்டி உரவு திரித்துப் பின் அது உயிர் மெய் ஒலியைக் குறிக்கத் தொடங்கி விட்டது. என்பது அச்சும் தட்டச்சும் துணைக்கொண்டு முன்னேற விரும்பும் மொழியின் வளர்ச்சிக்கு வழி வகுக்காது. ஆணும் பெண்ணும் அம்மை அப்பராய் அருகருகே அமர்ந்திருப்பதைத்தான் குழந்தைகளால் பார்த்துச் சுவைக்க முடியும், அவர்கள் அர்தநாரீசுரர்களாகி விடுவதை அவர்களால் செரிமானம் செய்து கொள்ள முடியாது அம்மையப்பர் அருகிருந்து குழந்தைக்கு அறிவுப் பாலூட்டிய செய்தியைத் தான் நாம் கேட்டிருக்கின்றோம். அர்த நாரீசுரர்கள் அதனைச் செய்தார்கள் என்பதை எங்கும் நாம் கேட்டதில்லை. முருகன் என்ற சொல்லை 'ம்உர்உக்அன்' என்று எழுதினால் அது ஒலியிலோ, பொருளிலோ மாறு பட்டும் விடும் என்று சொல்ல எந்த இலக்கண அறிஞரும் முன்வரமாட்டார். 'ம்' கரத்தையும் உகரத்தையும் இணைத்து 'ம்உ' என்று எழுதாமல் 'மு' என்று எழுதுவதில என்ன எளிமை ஏற்பட்டுவிடக் கூடும்? அவ்வாறே 'ர்' கரத்தையும் 'உ' கரத்தையும் இணைத்து 'ர்உ' எழுதி அமையாமல் 'ரு' என்று எழுதுவதிலும் முயற்சி எளிமை இருக்கும் என்று சொல்லிவிடவும் முடியாது. இனி, 'க்' கர மெய்யுடன் 'அ' கரவுயிர் ஒன்றும் போது 'க்அ' என்று எழுதுவது தான் முறையாகும். புள்ளிகள் நீக்கிவிட்ட அளவிலே 'க்' கர மெய் 'க' கார உயிர் மெய்யாகி விடுகிறது என்று 'இலக்கணம்' கூறுகின்றவர்கள் மொழியியலிலிருந்து நெடுந் தொலைவு விலகிச் சென்று விடுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அந்தோ பாவம்! ஒன்பதும் பத்தும் புணர்ந்தால் 'தொண்ணூறு' என்ற சொல் தோன்றிவிடும் என்று சொல்வதையும் 'இலக்கணம்' என்று ஏற்று வந்தவர்களாயிற்றே நாம். உருவம் திரிந்த 216 அர்தநாரீசுரர்களையும் நாம் அடியோடு மறந்துவிட்டால் நம மெய் எழுத்துக்களுக்குத் தலைச் சுழிகள் இடவும் வேண்டுவதில்லை. 'ம்உர்உக்அன்' என்றெழுதாமல் 'மஉரஉகஅன' என்று முத்துக்கோர்த்தது போன்று எழுதுவதே அமையும்.

ஆம், நச்சினுர்கினியர் கூறுவது போன்று இங்குக் காலத்திற்குக் காலம் வேறு வேறு கோலங்கொண்டு நீர்மேல் எழுத்தாக நெளிந்து வந்துள்ள சுழிகளுக்கும், கொம்புகளுக்கும், கால்களுக்கும், மேல் விலங்குகளுக்கும் கீழ் விலங்குகளுக்கும் இனி நம் தமிழில் இடமே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தி விட வேண்டும்.

உரோமன் எழுத்துக்களைக் கண்டும் பொருமைப்பட வேண்டாம்!

தமிழ் மொழியை உரோமன் எழுத்துக்களில் எழுதலாம் எனச் சொல்கின்றவர்களையும் நாம் காண்கின்ருேம். அவர்கள் அவ்வாறு கூறுவது வெறும் a b c d ...... z' என்ற எழுத்துருவங்களின் மீது கொண்ட காதலால் அன்று மெய் எழுத்துக்களையும் உயிர் எழுத்துக்களையும அருகருகே ஒன்றிய நிலையில் உருவம் திரிக்காமல் எழுதிச் செல்லும் ஒரு எளிய நிலைமை அங்கிருப்பதாலேயே அவ்வாறு கூறுகின்றனர். ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளிடமிருந்து நிறுத்தற்குறி, கால் புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி கேள்விக்குறி, விளிக்குறி, மேற்கோள்குறி ஆகியவற்றை நாம் பெற்றுக் கொண்டு உரை நடையில் வளர்ச்சி கண்டிருக்கின்ருேம். எழுதுகின்ற முறையிலும் அம்மொழிகளைப் பின்பற்றி 'உயிரும் உடம்புமாம்' முப்பது எழுத்துக்களை மட்டும் கொண்டு எழுத முற்பட்டுவிட்டால் நம் தமிழ் மொழி விரைவில் உலக மொழியாகி விடும் என்பதில் யாருக்கும் ஐயம் எழுதற்கிடமில்லை. உரோமன எழுத்துக்களில் குறில் நெடில் வேறுபாடு தெளிவாக இல்லை என்பதை நாம் அறிவோம். KANDAN என்பது கந்தனையும் குறிக்கும், காந்தனையும் குறிக்கும்; குறிலை அடுத்து நெடிலை வைத்துக் காணும் நெடுங்கணக்கு முறையைத் தமிழனே முதலில் கண்டான. எழுதாக் கிளவிகளாக இருந்துவந்த வடமொழிகளும் பின்னர் அதனைத் தமிழ் மொழியினிடமிருந்து ஏற்றுக் கொண்டன. இருந்தாலும் 'ரு' 'லு' போன்ற கூட்டொலிகள் அம்மொழிகளில் உயிர் வரிசையில் குறுக்கிட்டு இன்றும் தொடர்ந்து குழப்பி வருவதை உலகு நன்கறியும். எனவே எழுதுகின்ற முறையை மட்டும் சிறிது மாற்றி மெய்யையும் உயிரையும் தனித் தனியாக எழுதத் தொடங்கினுல் தமிழ் மொழி இன்றுள்ள எழுத்துருவக் குழப்ப நிலை நீங்கி உலகிலேயே எளிய, இனிய, சிறந்த மொழியாகத் திகழும் என்பது ஒரு தலை!

வாழ்க தமிழ்!

வ்ஆழ்க்அ த்அம்இழ்!!

வ ஆழகஅ தஅமஇழ!!!

கரந்தைப் புலவர் கல்லூரி
இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின்
34-ஆம் ஆண்டு விழா

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 34 ஆம் ஆண்டு விழா கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் 10—3—'73 சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கொண்டாடப்பெற்றது. விழாவுக்குத் தமிழகச் சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் ம பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்றார்கள். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம், எம். ஏ. பிஎச் டி. அவர்கள் மக்கள் காப்பியம் என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

முதலாமாண்டு மாணவர் இரா. தியாகராசன் தமிழ்த்தாய் வணக்கம் பாடினார்; கல்லூரி முதல்வர் புலவர். பி. விருத்தாசலம் எம். ஏ. அவர்கள் விழாவுக்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். நான்காமாண்டு மாணவர் இரா. அரங்கசாமி அறிக்கை படித்தபின்பு கல்லூரிப் பேராசிரியர் புலவர் பாலசுந்தரம் அவர்கள் சிலம்புச் செல்வர், டாக்டர் மெ. சுந்தரம் ஆகிய இருவருக்கும் வரவேற்பிதழைப் பாடியளித்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின் சிறப்புச் சொற்பொழிவாளர் டாக்டர் சுந்தரம் பேசியன பின்வருமாறு:— கிரேக்கம் சீனம் போன்ற பழமையான மொழிகளில் தமிழ் முதன்மையானது. வடமொழியிலே பல இலக்கியங்கள் உண்டு ஆனால் அவை மக்கள் இலக்கியமல்ல. நாடகப் பண்பும், வரலாற்றுப் பிணைப்பும் கொண்ட மக்கள் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினைப் போன்றதோர் காப்பியம் உலகில் எம்மொழியினும் இல்லையெனச் சொல்லலாம் தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதைப் பரிதிமாற் கலைஞரும், மறைமலையடிகளும் எடுத்துக் காட்டியுள்ளனர்; பாவாணர் தொடர்ந்து வலியுறுத்திக் கூறி வருகிறார். எனினும் தமிழை உயர்தனிச் செம்மொழி என்று மத்திய அரசு ஏற்றுக்

கொள்ளவில்லை. அதனை ஏற்குமாறு செய்ய வேண்டுவது தமிழர்களின் பொறுப்பாகும். நம்மரும் தமிழை ஆட்சி மொழியாக — உயர்தனிச் செம்மொழியாக — மக்கள் வாழ்க்கை மொழியாக — உயிரோட்டமுள்ள உலக மொழியாக உருவாக்க நாம் முற்படுவோமாக.''

அடுத்துச் சிலம்புச் செல்வர் ஆற்றிய முடிவுரை பின் வருமாறு:

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை மக்கள் இலக்கியம் எது என்று சொன்னால் அது நமது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமேயாகும். சிலம்பிற்கு முன்பும் பல இலக்கியங்கள் தோன்றின. ஆனால், சிலம்பு மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அளவிற்கு வேறு எந்த ஒரு இலக்கியமும் மக்கள் இதயத்தைத் தொடவில்லை. காரணம் காப்பிய மாளிகையின் கட்டுக்கோப்புச் சிதையாத வண்ணம் மக்களின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்ட இலக்கியம் சிலப்பதிகாரம் என்பதேயாகும். மக்களிலே வேறுபாடு இருக்கலாம்; ஆனால் அந்த வேறுபாட்டில் ஏற்றத் தாழ்வு இருத்தல் கூடாது இது போன்ற வேறுபாடுகளைக் களையும் பொருட்டாக—மனித இனத்தின் ஒளி விளக்காகத் திகழும் இலக்கியம் நமது சிலம்பு ஒன்றுதான்.

மூன்று பிளவுகளாக வெட்டுண்டு கிடந்த தமிழகத்தை இணைக்கும் ஓர் இணைப்புப் பாலமாகச் சிலம்பினைச் சித்திரிக்கின்றார். இளங்கோவடிகள். மண் திணிந்த இந்த ஞாலம் பிளவு பட்டாலும் மக்களினம் பிளவு படலாகாது என்பது இளங்கோவடிகளின் பெரு விருப்பம், இளங்கோவடிகள் பிறப்பால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்து — சேரர் மரபைச் சேர்ந்தவராக இருந்தும் சோழனை வாழ்த்துகின்றார். பாண்டியனைப் பாராட்டுகின்றார் வஞ்சிக் காண்டத்தில் சேர சோழ பாண்டியர்கள் மூவருமே ஒருசேர வாழ்த்தப் படுகின்றார்கள். சிலப்பதிகாரத்தைப் பொருத்தவரை அது கற்பனைக் காப்பியமன்று, அஃது ஓர் வரலாற்றுக் காப்பியமாகும்.

முதற் குலத்தைச் சேர்ந்தவளான தேவந்தி மூன்றாவது குலத்தவளாகிய கண்ணகிக்கு வழிபாடாற்றும் பூசாரியாக்கப் படுகின்றாள், அதன் மூலம் சாதி வேறுபாடு நொறுங்கி வீழ்கிறது. கவுந்தியடிகள்,

''கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்''

என்கின்றார். எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் கற்புக்குத் தலை வணங்கியே ஆதல் வேண்டும். உலக ஒருமைப் பாட்டைக் கற்பின் வழியிலே அமைக்க முடியும். தமிழிலக்கிய மரபில் பெண்ணிற்கே முதலிடம் அளிக்கப் பெற்றுள்ளது செல்வச் செழிப்புள்ள கண்ணகி காப்பியத் தலைவியாகப் பூம்புகார் நகரிலே தோன்றுகின்றாள். ஆனால் இறுதியிலே வறியவளாக இருந்தும் தனது கற்பின் மேம்பாட்டால் உலகம் போற்றும் தெய்வமாகின்றாள். போர் மக்களிடையே நடைபெறக் கூடாது மன்னர்களிடையே போர் நடந்தால் அந்தப் போர் நீதியின் அடிப்படையில் நடைபெறுதல் வேண்டும்.

தமிழை வலம் வந்தால் எதனையும் பெறலாம். என்ற எண்ணம் ஒரு காலத்திலிருந்தது. ஆனால், இன்றோ தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாவதற்கு, அதுவும் தமிழ் நாட்டிலேயே எதிர்ப்பாம். தமிழ் பயிற்று மொழியென்றால் அதற்கும் தமிழ் நாட்டில் எதிர்ப்பு தமிழில் எல்லாமே உண்டு சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களில் பல்கலையும் குடிகொண்டிருக்கின்றன நாம் என்ன சொல்கின்றோம்; முதல் பாகம் தமிழ். இரண்டாவது பாகம் ஆங்கிலம், மூன்றாவது பாகமாக எந்தப் பாடத்தை ஒரு மாணவன் எடுக்கின்றானோ அதைத் தமிழில் படி என்கின்கிறோம். தெரியாத பாடத்தைத் தெரிந்தவர்கள் தான் போதிக்கவேண்டும். தெரியாத பாடத்தைப் புரியாத மொழியில் நடத்துவது என்பது முறையன்று. ஆங்கிலம் இந்த நாட்டின் ஆதிக்க மொழியாக உள்ளவரை தமிழும் உயராது, தமிழனும் உயரமாட்டான் ஆங்கிலம், இந்தி வடமொழி ஆகிய எந்த மொழியாக இருந்தாலும் தமிழை வலம் வந்து வணங்கினால் ஏற்றுக் கொள்வோம். தமிழோடு மோதும் எந்த மொழிக்கும் ஆதரவு தரமாட்டோம், எதிர்த்துப் போராடுவோம்.'' எனப் பேசி முடித்தார். பின்னர்ப் பரிசுகள் வழங்கப்பட்டன. செயலாளர் சு. தங்கராசு நன்றி கூற, நாட்டுப் பண் பாடியதும் கூட்டம் இனிதே முடிவுற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்க மணி விழாவின் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதால் இவ்விதழ் காலந் தாழ்த்து வெளி வர நேர்ந்தமைக்கு அன்பர்கள் பொறுத்தருளுவார்களாக.

— பொழிற்றொண்டர்.